2024 – ஆகஸ்ட் மாதம் 13– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : : 26 / 2023*

*2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, செல்வி |
| கணவர் பெயர் | : | ராஜவேலு |
| ஊர் | : | ஆண்டிக்குரும்பலூர் |
| வட்டம் | : | குன்னம் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | விவசாயக்கூலி |
| வயது | : | 36 |

<u>தேதி: **13.08.2024.**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**<u>எனது சார்பாக :–</u>**

**1).** 10.05.2022–ம் தேதியிட்டு குன்னம் காவல் நிலைய குற்ற எண் 169 / 2022 –ன் கீழ் இதச பிரிவுகள் 279, 337–ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் இணை வழி கணிணி நகல் **ம.சா.ஆ.1.**

**2).** எனது மைனர் மகன் லோகேஷ் திருச்சி காவேரி மருத்துவமனையில் 10.05.2022 முதல் 11.07.2022 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ விடுவிப்பு சான்று நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது. **ம.சா.ஆ.2.**

**3).** எனது மைனர் மகன் லோகேஷ் திருச்சி காவேரி மருத்துவமனையில் 15.07.2022 முதல் 26.07.2022–ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ விடுவிப்பு சான்று நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது. **ம.சா.ஆ.3.**

**4).** சென்னை எழும்பூர் Institute of Child Health and Hospital for Children மருத்துவமனையில் 13.02.2023–ம் தேதி முதல் 25.03.2023 –ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான விடுவிப்பு சான்று நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது. **ம.சா.ஆ.4.**

**5).** எனது மைனர் மகன் லோகேஷ் திருச்சி அரசு மருத்துவமனையில் 13.07.2023 முதல் 31.07.2023 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ விடுவிப்பு சான்று நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது. **ம.சா.ஆ.5.**

**6).** போக்குவரத்து பில்கள் வரிசை எண்ணிக்கை – 4 மற்றும் தொகை ரூ.13,750/– அசல் **ம.சா.ஆ.6.**

**7).** எனது மகன் சிகிச்சை மேற்கொண்டதற்கான மருத்துவ ரசீதுகள் 82– எண்ணிக்கை கொண்டது ரூ. 19,59,922/– அசல் **ம.சா.ஆ.7.**

**8).** எனது மைனர் மகனின் காயத்தின் தன்மையை காண்பிக்க புகைப்படங்கள் எண்ணிக்கை –9 மற்றும் சி டி –1, சேர்த்து **ம.சா.ஆ.8.**

**9).** 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச்சான்று கணிணி நகல் **ம.சா.ஆ.9.**

ஆக தாக்கல் செய்கின்றேன். எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**ஒப்பம்/–சி. சங்கர்,**
**தலைமைக்குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**